தினத்தந்தி, திருச்சி
03/04/19

தி ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் சார்பில்

# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு ரூ.10 லட்சம் மருத்துவ உபகரணங்கள்

அரியலூர், ஏப்.3–

அரியலூர் மாவட்டம் செந்துறை அருகே உள்ள மணக்குடையான் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இங்கு ஸ்கேன் வசதி இல்லாததால் இப்பகுதி கர்ப்பிணிகள் மிகவும் அவதி அடைந்து வந்தனர். இதனால், இந்த சுகாதார நிலையத்துக்கு தி ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் சார்பில் ரூ.10 லட்சம் மதிப்பிலான அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மெஷின் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, அரியலூர் மாவட்ட வட்டார மருத்துவ அலுவலர் மேகநாதன் முன்னிலையில் தி ராம்கோ சிமெண்ட்ஸ் ஆலையின் உபதலைவர்(உற்பத்தி) ஆஷிஷ்குமார் ஸ்ரீவஸ்தவா, உதவி உபதலைவர் (பணிகள்) சந்தானகிருஷ்ணன் மற்றும் மூத்த துணை பொது மேலாளர் (கணக்கியல் மற்றும் நிர்வாகம்) ஞானமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு ஸ்கேன் மெஷினை வழங்கி பேசினார்கள். மேலும் கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து மாவு உருண்டைகள் வழங்கப்பட்டது. விழாவில் மக்கள் தொடர்பு அதிகாரி கண்ணன் மற்றும் ஆலையின் உயர் அதிகாரிகள், தொழிலாளர்கள், மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.